செய்தி வெளியீடு எண்: 522 நாள் : 30.09.2013

<u>செய்தி வெளியீடு</u>

தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில், தமிழகத்தில் நிலவும் மின் நிலைமை குறித்து **26.9.2013** அன்று தலைமைச் செயலகத்தில் ஓர் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. நத்தம் இரா. விஸ்வநாதன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இரா. வைத்திலிங்கம், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஆர். சண்முகம், இ.ஆ.ப., உள் துறை முதன்மைச் செயலாளர் திரு. நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர்

திரு. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., எரிசக்தித் துறை செயலாளர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., வேளாண்மைத் துறை செயலாளர் திரு. சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கிணங்க, உயரழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் வணிக மின் இணைப்புகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் முதல் முறையாக 14.8.2013 முதல் 30.9.2013 வரை தளர்த்தப்பட்ட நடவடிக்கையை தொழில் அமைப்புகள் பெரிதும் வரவேற்றுள்ளதையும், தென்மேற்கு பருவமழை நன்கு பெய்ததன் காரணமாக நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதையும், 600 மெகாவாட் மின் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம், தேசிய அனல் மின் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட 1,000 மெகாவாட் திறன் கொண்ட வல்லூர் அனல் மின் திட்டங்கள், 1,200 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டங்கள் உற்பத்தியை தொடங்கியுள்ளதையும் தமிழ்நாடு மின் வாரிய அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

தமிழ்நாட்டின் தற்போதுள்ள மின் நிலைமையையும், தொழில் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, 1.10.2013 முதல் உச்ச மின் தேவை நேரம் தவிர மற்ற நேரங்களில் உயர் மின் அழுத்த தொழில் மற்றும் வணிக மின் நுகர்வோர்களுக்கு 40 விழுக்காடு மின் கட்டுப்பாட்டினை 20 விழுக்காடாக குறைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், உச்ச மின் தேவை நேரங்களில் வீட்டு உபயோகத்திற்கு மின்சாரம் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை உச்ச மின் தேவை நேரங்களில் உயர் மின் அழுத்த தொழில் மற்றும் வணிக மின் நுகர்வோர்கள் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளவாறு அவர்கள் தேவையில் 10 விழுக்காட்டிற்கு மிகாமல் பயன்படுத்த தொடர்ந்து அனுமதிக்கப்படுவார்கள்

இந்த நடவடிக்கை தொழில் வளம் பெருகவும், வேலைவாய்ப்புகள் உருவாகவும் வழிவகுக்கும்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 30.9.2013